உ

சிவமயம்



அமரத்துவம் அடைந்த

திரு. சுப்பையா அருணாசலம் அவர்களின்

# நினைவுமலர்

16th October, 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அமரத்துவமடைந்த...



தோற்றம்
05 - 12 - 1908

மறைவு
17 - 09 - 2008

# அமரர். திரு. சுப்பையா அருணாசலம்

## திதி வெண்பா

சருவதாரி யாண்டு புரட்டாதி சார்மதியில்
வருதிதியா மபரபக்கத் துதியையே - பருவுடலை
அருணா சலப்பெரியோன் அம்புவியில் விட்டகன்று
அரனார் அடியடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா ரார்பெறுவா ரச்சோவே!

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அழகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்

காப்பு

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசன் அடிபோற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யாவிமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நூற்றாண்டு...

இலங்கையின் வடபாகத்தில் கடல் அலைமோதும் தீவுக்கூட்டங்களில் ஒன்றான ஊர்காவற்றுறையில் நீர், நில வளங்கள் ஒன்றாகத் திகழ்ந்த கிராமம் சுருவில். விவசாய பெருங்குடி மக்களையும், இலங்கையின் பெரு வணிகர்களையும் ஒன்றாகத் தன்னகத்தே கொண்டிருந்தது. இக்கிராமத்தில் சைவ வேளாள குடியில் தோன்றிய சிதம்பரப்பிள்ளை சுப்பையா, பொன்னம்மா தம்பதிகளின் நான்காவது புத்திரனாக 1908ஆம் ஆண்டு டிசம்பர் 5ம் திகதி அருணாசலம் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சுருவில் பாடசாலையில் கற்றார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த அவர் மூத்த தமையன் திரு சு. கோபாலபிள்ளையின் வழிகாட்டலில் மலைநாடான பண்டாரவளை சென்று தமையனுடன் வியாபாரத்தில் ஈடுபட்டு விடா முயற்சியும், கடமை உணர்வில் கண்ணும் கருத்தும் உடையவர் எனும் பெயருடன் விளங்கினார்.

1939ம் ஆண்டு ஆவணி மாதம் 31ம் திகதி வேலணையைச் சேர்ந்த முருகேசு செல்லாச்சியின் மனைத்தக்க மாண்புடையாள் மீனாட்சியை திருமணம் செய்து இரு ஆண்களையும் இரு பெண்களையும் பிள்ளைகளாகப் பெற்றார்.

1945ம் ஆண்டில் பண்டாரவளையில் சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட தேயிலைத் தோட்ட உரிமையாளராகித் தனிப்படச் சிறப்பாக நிர்வகித்தார். இவரின் செல்வம் அனைவருக்கும் பயன்பட்டது. அவரிடம் உதவி பெற்ற பலர் இலங்கையில் பெரும் வியாபாரிகளாக வாழ்ந்தாலும், அவர் என்றுமே இறை உணர்வுடன் உதவி வேண்டுவோருக்கு உதவி, இருப்பது போதும் என்று எளிமையான வாழ்வை பெருமை பொருந்தியதாகக் கொண்டு வாழ்ந்தார். அதனால் அவர்களது வீட்டிற்கு, யாழ்ப்பாணம் மணி ஐயர், துர்க்கா துரந்தரி, கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, சுவாமி சச்சிதானந்தர், குன்றக்குடி அடிகளார், கிருபானந்தவாரியார், இமயத்து சுவாமி சித்தானந்தர் போன்ற பலர் பண்டாரவளை செல்லும் போது ஐயா வீட்டில் தங்கி நின்று போவார்கள். இந்த மகா புருஷர்களின் வரவால் அவ்விடம் புனிதமடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய காலத்தில் மூத்த மகள் சாரதாவை எந்திரி திரு. நாகையாவுக்கும், இளைய மகள் சரோஜாதேவியை வைத்திய கலாநிதி செ. சு. நச்சினார்க்கினியனுக்கும், மகன் பட்டயக் கணக்காளர் ஆனந்தராஜாவை பவானிக்கும், மகன் வைத்திய கலாநிதி மகேந்திரராஜாவை பரந்தாவுக்கும் முறைப்படி திருமணம் செய்து வைத்து முறையே ஒன்பது பேரப்பிள்ளைகளையும் அவர்கள் மூலம் எட்டு பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

60 ஆண்டுகளுக்கு மேலாக பண்டாரவளையில் சீருடனும், சிறப்புடனும், தமிழர் மட்டுமல்ல, சிங்கள, இஸ்லாமிய மக்களாலும் பெருமதிப்புக்கு ஆளானார் என்ற ஒரே காரணத்துக்காக 81ம் ஆண்டு, மற்றைய சிங்களப் பிரதேசங்களில் நடந்ததுபோன்றே, பண்டாரவளைப் பிரதேசத்தில் ஐயாவின் வீடு வாசல், சொத்துக்கள் எரியூட்டப்பட்டு, யாழ்ப்பாணம், கொக்குவிலில் குடியேறினார். சோதிக்க ஆரம்பித்தால் சோதியான பரம்பொருள் உடனே நிறுத்துவதில்லை. 1990, 1993ல் மூத்த மருமகன் நாகையாவும், மூத்த மகள் சாரதாவும் அகாலமாக இறையடி இணைந்தார்கள். எல்லா வசதிகளுடனும் இருந்த ஐயா, ஒரு கைப்பெட்டியுடன் 1995ல் காரில் சாவகச்சேரிக்கு இடம் பெயர்ந்து, 1996ல் காரையும் அங்கு நிறுத்திவிட்டு அதே உடைப்பெட்டியுடன் கொழும்புக்கு மனைவி, மகள் பேத்தி பூரணியுடன் இடம் பெயர்ந்தார்.

அவரது நூறாவது பிறந்த நாளை 2008ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் திகதி கொண்டாட பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர் என்று அனைவரும் எதிர்பார்த்திருக்க, கூற்றுவன் வேறொரு மாற்றம் கண்டான். இன்னும் 78 நாட்களே ஒரு நூறு ஆண்டு முடிய இருந்த வேளை, 2008ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17ம் திகதி, எம்மை எல்லாம் ஏமாற்றி, எமன் அவரை இறையடிக்கு சேர்த்துவிட்டான். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

வேதாகம வித்யா பூஷணம்

**பிரம்மஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா**

(வி. சோமசுந்தரக் குருக்கள்) (சர்வ சாதகர் - ஆகம ஆலோசகர்)

**SRI. VISHVANARAYANA SHARMA** (V. Somasunthara Kurukkal)

*(Aagamic Executive)*

---

# ஆத்மசாந்தியுரை

உலகியல் வாழ்வில் சான்றோர் நட்பும் தரிசனமும் கிடைப்பதே அரிய பேறு. அவ்வாறு ஓர் பெருமகனின் தொடர்பு ஏறத்தாழ முப்பது வருடங்களுக்கு முன் எனக்கும் கிட்டியது. உயர்ந்த மெலிதான உருவம். தூய வெண்ணிற ஆடை, நெற்றியில் புஷ்பராகம் போல் வட்ட வடிவில் சந்தணத் திலகம், உயர் ரக பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி, மென்மையான பேச்சு, அன்பும் கண்டிப்பும் கலந்த அறிவுரைகள்; இவைதான் இன்று அமரராகி சிவப்பதப்பேறு பெற்ற உயர்திரு அருணாசலம் அவர்களை அன்று, 70களின் நடுவில், பண்டாரவளை நகர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் முன் மண்டபத்தில் நான் கண்டவை.

முதல் சந்திப்பிலே, அறிமுக வணக்கம். பின் என்னை அழைத்துச் சென்ற அமரர் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களிடம் என்னைப் பற்றிய பூர்வாங்க தகவல்கள், பரஸ்பரம் குருக்களிடம் அவரைப் பற்றிய பெருமையான தகவல்களுடன் கூடிய தகவல்கள், நீண்ட கால தொடர்புக்கு ஆதாரமாய் அமைந்தன. (He left an indelible impression in my mind from this first day. I met him last during the latter part of 2007 at Bampalapitiya Temple.)

புகழ்பூத்த சுருவில் ஐயனாரின் கும்பாபிஷேக விழாவில் அவரின் ஈடுபாடு அவரின் பிறந்த ஊர் விசுவாசத்தையும், பண்டாரவளை முருகன் ஆலய ஆரம்ப கால ஸ்தாபக உறுப்பினராக, கோவில் வளர்ச்சியில் மற்றைய அறங்காவலர்களோடு இணைந்து செயற்பட்ட விதம், அவரின் தெய்வ நம்பிக்கைக்குச் சான்றாக அமைந்தது.

ஏறத்தாழ 10 வருடங்களாக தொடர்ந்து வைகாசி மாத பண்டார வளை உற்சவத்தில், மூன்று நாட்கள் அவரது வீட்டில் எங்களுக்கு கிடைத்த வரவேற்பு, அவர் தம் இல்லத்துணைவியார், மகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(திருமதி நச்சினார்க்கினியன்) அன்பான விருந்தோம்பல், (ஆண் பிள்ளைகள் உத்தியோக நிமித்தம் வெளிநாட்டில்) வீடு திரும்பும் பொழுது No. I தேயிலைத்தூள் அன்பளிப்பு, அவர்களின் ஆசாரம், குருபக்தி என்பன அன்புச்சங்கிலியாக எம்மை விளைத்தது என்றே கொள்ளலாம்.

கிரிக்கட் துடுப்பாட்ட வீரன் 99வது ஓட்டத்தில் ஆட்டமிழந்ததுபோல் 78 நாட்களால் 100 வயதை தவறவிட்ட அமரர் அருணாசலம் அவர்கள் பூரணமாக தன் பணியை நிறைவு செய்து, மீளாத்துயில் கொண்ட புனிதர் என்பதும், அவர்தம் பிரிவு அவர் மனைவி மக்கள் சுற்றத்தார் தவிர அவரோடு அன்புடன் பழகிய அனைவரது இதயத்தையும் பிழியும் என்பதுவும், மண்ணிற் பிறந்தார் மறைவர் என்பதும் நிச்சயமான செய்தி.

பிரிவால் துயருறும் அனைவர்க்கும் ஆறுதல்கூறி அன்னாரின் ஆன்மா மீண்டும் பிறவாத பேரின்ப நிலையடைய சிவப்பரம்பொருளை இறைஞ்சியமைகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



## சிவசிவாவின் சிறு துளிகள்...

எண்ணங்கள் மிகச் சக்தி வாய்ந்தவை. ஆகவே மனதில் நல்ல எண்ணங்களை வளர்க்கவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். நோயற்ற வாழ்வு வாழ வேண்டும். எல்லோருக்கும் மங்களமே உண்டாகட்டும் என்ற மனப்பான்மை உள்ளவன் பரமாத்மாவுடன் இரண்டறக் கலக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலப்பிரபுக்கோர் நினைவு அஞ்சலி

பெரும் பெயர் படைத்த ஐயா அருணாசலம் அவர்களே, இன்று நீங்கள் இல்லை, காலம் ஆக ஆகி விட்டீர்கள். கண்டத்துள் இருந்து அகண்டமான அண்ட வெளியில் கலந்துள்ளீர்கள். இறைநிலை எனும் இயற்கையினை சேர்ந்து கொண்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

"பரமானந்த பெருநிலை அடைவதாக!
தூய உணர்வு நிலையுடன் ஒன்றிணைவதாக!"

ஜனனங்களின் நீண்ட காவியம், தோற்றம், மறைவு, போக்கும், வரவும், இறப்பு, பிறப்பென்றும் தொடரும் நிகழ்வுகளே. இப்பூவுலகில் நூறு ஆண்டுகள் வாழ்ந்து முடித்த, ஒரு நூற்றாண்டுக்குரியவர் நீங்கள்.

நீங்கள் பிறந்த ஊர் சுருவில். அலை கொஞ்சும் அழகிய கிராமம். பிரபலமான வர்த்தகப் பெருமக்கள் பலரைப் பிறப்பிடமாகக் கொண்டது. உங்கள் பெற்றோருக்கு, நீங்கள் நாலாவது மைந்தன். குந்தி பெற்ற பிள்ளைகள் அறுவரில் அருச்சுனன் போன்றவர் நீங்கள். அருணாசலம் எனப் பெயரிட்டதைப் போலவே ஓர் அசலமாகவே மலை நாட்டிலே பெரிய பெயர் படைத்த 'சு.அ.' விலாசம் கொண்ட ஓர் 'அசலான' மனிதனாகப் பரிணாமம் கொண்டீர்கள்.

பண்டாரவளை இலங்கையின் ஊட்டி. சூழல், சுவாத்தியம் என்பவற்றால் தனிச்சிறப்பைப் பெற்றது. உயர்தர வாசனை கொண்ட, உலகிலேயே முதல்தர தேயிலை இங்குதான் வருடத்தில் ஒரு சில மாதங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது. அன்றைய அரசியல் தலைவர்களின் பிரதான வாசஸ்தலமாகவும் கருதப்பட்டது.

உங்களது சம காலத்தவர் எவரும் இன்றில்லை. உங்கள் காலத்துக்கும் இன்றைய மூன்றாம், நாலாம் சந்ததியினருக்கும் இடைவெளி பெரியது. அடிக்கடி நீங்கள் பெருமை கொள்வது உங்களிடம் பணியாற்றிய நபர்களின் எண்ணிக்கை பற்றி. இவர்களில் ஓர் இருவரைத் தவிர எவரும் இல்லை. இருப்போரில் நானும் ஒருவன். வாழ்வு எனும் நாடக மேடையில் உங்கள் பாத்திரம் பல தடயங்களைப் பதித்து நிற்பது; சரித்திரப் பதிவை ஏற்படுத்தியது. 19ம் நூற்றாண்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் வந்தார்கள். கூடவே தேயிலைச் செடியும் வந்தது. தொழிலாளர்கள் வந்தார்கள். மலைநாடு மலைபோல் வளம் பெற்றது.

வடபகுதி தமிழரைப்பற்றி வேடிக்கையாக அக்காலத்து நிலையைக் குறிப்பிடுவார்கள். 8ஆம், 9ஆம் வகுப்பு ஆங்கிலப்படிப்பு முடித்தவர்கள் அனைவருக்கும் அரசாங்க சேவைகள், 5ஆம் வகுப்பு கடந்தோர் மலேசியா, சிங்கப்பூர். ஏனையவர்கள்தான் புகையிலைச் சிப்பத்துடன் தென் இலங்கை வந்த புள்ளிகள். இவை எதிலும் நீங்களடங்கவில்லை. வேளாண் தொழிலையே உயர்தொழிலாகக் கருதி அன்றையச் சமூகச் சூழலில் சிறுவயதிலேயே படிப்பை நிறுத்தி விட்டு, ஆரம்பித்த உங்கள் பரிமாணம், குறுகிய காலத்திற்குள்ளே, பண்டாரவளை நகரத்தில் நெற்றித்திலகம் என்றாற் போலத் திகழ்ந்த, பெரிய விலாசம் கொண்ட, அக்காலத்து அழகிய இருமாடிக்கட்டிடத்தின் பொலிந்ததோர் முதற்தரப் பட்டுமாளிகைக்கும், அதன் ஏழு கிளை நிறுவனங்களுக்கும் சற்றுக் குறைந்த சம பங்காளியாக, நிர்வாக அதிகாரியாக, பார்த்தசாரதி எனும் பங்கை வகித்தீர்கள். இரண்டாவது மகா யுத்தக் கால ஆரம்பத்துக்கும், முடிவுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை பாரிய மாற்றங்களைச் சந்தித்தது. உங்கள் நிறுவனத்தில் நான் ஓர் சின்னக் கணக்குப்பிள்ளை. அந் நிறுவனம், ஒரு காலத்தில், சுதந்திர இலங்கையின் முதல் மகா தேசாதிபதி உள்ளடங்க, அநேகமான அரசியல் தலைவர்கள், மந்திரிமார் என்போர் பண்டாரவளை வரும் வேளைகளில் கால் வைத்துப் போகுமிடமாகவுமிருந்தது. ஊவா மாகாணத்தில் புடவை பங்கீட்டு விநியோகத்தராக உங்கள் நிறுவனம் அரசாங்கத்தால் நியமனமானது. இவ்வாறு நீள்பவை பல. உங்கள் பரிணாம முதல் அத்தியாயமும் நீள்வனவே.

இரண்டாவது அத்தியாயம் ஏறத்தாழ 35 ஆண்டுகள் நீண்டது. செயலாட்சித்திறன், அறிவாட்சித்திறன் என்பவற்றுக்கு அப்பால் மியூடேசன் என்று சொல்லப்படும் இயல்பூக்கமானது உங்கள் வாழ்வு முறையை அடியோடு புரட்டி, புரட்சியை ஏற்படுத்திய சம்பவம் - திடீர் மாற்றமது. அன்று தோட்டத்துத் துரைமாருக்கே எங்கும் எதிலும் முன்னுரிமை. 1935, 36 அளவில் ஆனந்தவிகடன் உதவி ஆசிரியரான கல்கி கிருஸ்ணமூர்த்தி தனது இலங்கைப் பிரயாணக் கட்டுரையில் இதே கருத்தை எழுதியிருந்தார். வெள்ளைக்கார கவர்னர்களால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலங்களை உரிமை கொண்ட நிலப்பரப்புக்கள், வளவ்வுவ என்று அழைக்கப்பட்டனர். கண்டிய வம்சத்தினரே அதனது உடமையாளர்கள், மேல் தட்டு மக்களாகவுமிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்தொழில் துறைக்கு பெருமதிப்புக்குக் காரணம் இலங்கைத் தேசிய கஜானாவுக்கு இது முதுகெலும்பு. தோட்ட தொழிலாளர்கள் நிரந்தர வருமானம் பெறுபவர்கள். மேலை நாடுகளில் கிறடிட் கார்ட் வியாபாரம் போலவே தோட்ட தொழிலாளர்களுக்கும் அன்று வலிய கடனாக பண்டங்களைத் தருவார்கள். மாத முடிவில் பணத்தைக் கறந்துவிடுவார்கள். சிங்கள மக்களின் நிலை வேறானது. மலைநாட்டு வர்த்தக வளர்ச்சியின் முதுகெலும்பு தோட்டத் தொழிலாளர்களே. இவர்களே வியாபாரிகளின் எஜமான்கள்.

*1944* அல்லது *1945* இல் ஒரு நாள் திடீரென சிறியதுமல்ல, பெரியதுமல்ல என்று சொல்லப்படும் முந்நூறு ஏக்கருக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்ட நிலத்துக்கு நீங்கள் எஜமானர் ஆனது ஒரு கதை போன்றது. வடபகுதித் தமிழர்கள் புகையிலையைப் பற்றி அறிந்திருப்பார்கள். கூடினால் பனைப்பகுதி தெங்குத் தோட்டங்களை உடைமையாகக் கொண்டிருக்கலாம். மலை நாட்டில் பெரிய கங்காணிப் பரம்பரையினருக்கே தோட்ட உடைமை உண்டு. அவர்கள் தேயிலைச் செடியோடு பிறந்து வளர்ந்தவர்கள். விவசாயக் கல்லூரியில் தோட்டத்துரைமாராக பதவி பெற சிலகாலம் பயிற்சி எடுப்பார்கள் ஆங்கிலேயர். இந்தத் தகமையும் உங்களுக்கு இல்லை. யாழ்ப்பாணத் தமிழ்மகன் ஒருவர் இவ்வாறு தோட்ட உடைமையாளராகவும், அத்தியட்சகராகவும், முதல் முறையாக அந்த இடத்தை வகித்தவர் நீங்கள் என்றால் பிழை அல்ல. மேலும் நீங்கள் ஓர் தூண்டு சக்தியாகவும் இருந்தது உண்மையே.

வர்த்தகம் என்பது தன்னலமே முதலாகக் கொண்டு இயங்குவது. பெருந்தோட்டத்துறையோ சமூக வளர்ச்சிக்குத் தளமானது. இயற்கையின் அழகு, பசுமையின் குளிர்ச்சி, உள்ளத்துக்கு பூரிப்பைத் தருவது. அதிகாலை வேளை, பச்சைக் கம்பளம் விரித்தால் போல் விரிந்து, பரந்து, சிறு சிறு குன்றுகளாக பொலிந்து மனத்தைக் கொள்ளும் தேயிலைச் செடிகள் ஓர் அழகுத்தோட்டம். மேலும் பண்ணைகள், பழம்தரும் மரங்கள், பூந்தோட்டங்கள், குடிமனைகள், அழகிய பங்களா இவையெல்லாம் ஒரே நாளில் கட்டி எழுப்பப்பட்ட வையல்ல. விடாமுயற்சி, தன்னம்பிக்கை, பண்பாடு, சுயஇச்சைத் தவிர்ப்பு ஆகியவற்றால் உருப்பெற்றவை. தொழில் நிர்வாகம் என்பது சாதாரண விடயமே அல்ல. தமிழ்த் தொழிலாளர்கள் வெள்ளைத் துரைமார் என்றால் மட்டுமே மதிப்புத் தருவது பழக்கதோசம். இல்லை யேல் ஒரு சிங்களமகனாகவாவது இருக்கவேண்டும். இவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து பாரம்பரிய தோட்ட முதலாளிமாரது பாராட்டையும் பெற்று, அரச தொழில் துறையால் குறை ஏதும் காணப்படாத சீர்மையுடன், தொழிலாளர் வேதனக் கொடுப்பனவை ஒரு தினம் கூடப் பிந்தாமலும் நிர்வாகம் செய்து காட்டிய, வேட்டியும் வெள்ளைச் சேட்டு அணிந்த துரைமகன் நீங்கள். எனது ஏற்ற, இறக்க நிகழ்வுகளுக்கு ஆதாரமாக வும், கருத்து முரண்பாடுகளுக்குள்ளும் பிழை பொறுத்து, பிழை தவிர்த்துப் பணித்து, நேசித்து, இரண்டாம் அதிகாரியாக்கி பணிகொண் டதை மறக்க முடிவதில்லை. உங்கள் பெருமைகளை எனது 86வது வயதிலும் நினைவில் வைத்து எழுதுவதில் பெருமைகொண்டு என் கண்ணீர் அஞ்சலியாகவே இதை உங்கள் நினைவு மலரில் வெளியிட விரும்புகிறேன். உங்கள் தேயிலைத்தோட்டம் சிங்களக் கிராமங்களால் சூழப்பட்டாலும் பண்டாரவளைப் பட்டினத்துக்கு அருகாமையில் அமைந்திருந்தது. இங்கு பல தமிழ் வர்த்தகர்கள், தமிழ்மொழி பயிற்றும் பாடசாலைகள், தமிழ் ஆசிரியர் குழாம், அரசசேவையாளர் கள் என அதிகமான தமிழ்க் கலாசாரச் சூழல்; நகரபிதா, தமிழ் உயர் அதிகாரிகள் என்றும் தமிழர் செல்வாக்கு அங்கு மேலோங்கி இருந்தது. இது ஒரு பொற்காலம். பண்டாரவளையில் முருகன் கோவில் தோற்றம் பெற்றது 1947-1948இல். இமாலய அடிவாரம் முதல் இலங்கை ஈறாக தொடர்ந்து ஆன்மீக பெரியார்களின் வருகைகள் இருக்கும். இத்தனைக்கும் நடுவே அனைத்து வைபவங் களும் உங்களிடத்தை தொட்டு தொடர்வது வழமையானது. பண்டார வளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இந்து பரிபாலன சபை போசகராக 1981ம் ஆண்டுவரை இருந்த நீங்கள் உடுவரை பௌத்த வித்தியாலய நிர்வாக சபை உறுப்பினராகவும், பதுளை தனியார் வைத்தியசாலை நிர்வாக சபை உறுப்பின ராகவும், தொடர்ந்து பல வருடங்களாக இருந்து உங்கள் அனுபவ அறிவை பகிர்ந்து கொண்டீர்கள்.

இவ்வாறு ஓர் எல்லைக்குள் மட்டுப்படாது, மதிப்பைப் பெற்ற சிறப்பு இயல்புகள், உங்களது வாழ்வியல் பதிவுகள். குறிக்கோள் பணத்தைத் திரட்டுவது என்றில்லாது, விளைச்சலைப் பெருக்க வேண்டும்; ஒவ்வோரு செடியையும் பேணி வளர்த்தால் அது நாட்டுக்கும், சமூகத்துக்கும், தொடர்புடைய மக்களது வாழ்வுக்கும் உயர்வு தரும் என்பதிலே கருத்து ஊன்றி, கர்மம் மட்டுமே கடமை என்று, அல்லும் பகலும் உழைத்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு கிடைத்த சுதந்திரம் பெரும் தோட்டத் தொழில்துறையில் குழப்பத்தையும், தாக்கங்களையும் ஏற்படுத்தியது. நில உடைமைகளில் கைவைக்கப்பட்டது. வாழத் தெரியாதோர் வாழும் நாட்டில், ஆளத் தெரியாதோர் ஆட்சி தான் நடைபெறும் என்பார்கள். ஈட்டிய பொருளை வைத்திருக்கும் சுதந்திரமும் பறிக்கப்பட்டது. வேறுவிதமாகக் கூறுவதானால், நேர்மையாக உழைப்பது, பொருள் ஈட்டுவது குற்றமாகப் போய்விட்டது. பறித்தெடுத்தல் சட்டவடிவமாக்கப்பட்டது. பழிவாங்கலும் மறைமுகமாக ஈடேறியது. பொருட்கள் யாவுமே தோற்றம், தோற்றம் என்பதே மாறிக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு, என்பது தத்துவ உலகிற்கு பொருத்தமானது. இந்த மாற்றங்கள் உங்களில் தாக்கத்தை உண்டாக்கி இருக்க வேண்டும். ஆனால் அது நிகழவில்லை என்பதே நீங்கள் இத்தனை ஆண்டுகள், திடமாக நல்மனையாளுடன் வாழ்ந்திருந்ததே சான்றாகும். உங்களால் உயிரூட்டப் பெற்றும், நடுகை செய்யப் பட்டும், வெட்ட வெட்ட பயன் தந்து கொண்டே இருக்கும் பல இலட்சக்கணக் கான தேயிலைச் செடிகளின் 'கர்த்தா' நீங்கள் என்பதை, இயற்கை அன்னை பதிவில் வைத்திருப்பாள்.

விருட்சமான உங்களின் விழுதுகளால், அருணாசலம் என்பது பூரணாசலமாகவே சிறப்பை பெற்றுவிட்டது. மூன்று வித ஆசைகளில் மண்ணாசை வலியது. சரித்திரத்தை ஆராய்ந்தால் முடிசார்ந்த மன்னர் களும் பொதுவில் 30 வருடங்களுக்கு மேல் ஆட்சி செலுத்தியதில்லை. மனிதன் மண்ணை நேசிப்பதுண்டு. மண் மனிதனை நேசிப்பதுண்டா? உங்களது வாழ்வுப் பரிமாணத்தில் இரு தடவைகள் இது பதிவாகி யிருப்பது ஒரு வரலாறு.

வாழ்வியல் தத்துவத்தைக் கூறுவது பாரதப் போர். அது நடந்து கொண்டேயிருக்கும். நீங்கள் பார்க்க விரும்பிய நீதி, செயலாக விளைந்து முளைத்து எழும். உங்கள் ஆத்மா பேரொளியோடு கலந்து ஒளிரட்டும். தெய்வீக வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ச. இராசலிங்கம்**
கனடா *(416 438 4013)*

"**நோ**யற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். இதற்கு நல்லதையே செய்வோம். தீயவற்றை முற்றிலும் விலக்குவோம். பொய், கோபம், பொறாமை, வெறுப்பு, அதிக ஆசை வேண்டவே வேண்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நூறு கடந்ததுவோ?

சுருவிலூர் சுந்தரன் அருணாசலம் ஆண்டு எட்டில் பிறந்து
வேலணையூர் சுந்தரி மீனாட்சி அம்மையுடன்
இல்லறத்தில் நல்லறம் ஆண்டு முப்பத்து ஒன்பதில் பூண்டு
இறையவனின் ஊழ்வினைக் கடலைக் கடக்க
வாழ்க்கை ஓடத்தில் இணையுடன் துடுப்பெடுத்தீர்.

சக்தியும் சிவனுமாக சங்கமித்த நாள்தொட்டு
பக்தியுடன் பண்புடன் மாண்பிமிகு தம்பதிகளாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து,
நன்மக்கட்பேறாய் நான்மணிகளைப் பெற்று, வளர்த்து,
பழி பிறங்கா பண்புடை மக்களாய், பாரினில் கரையேற்றி,
ஈதல் இசைபட வாழ்ந்தீர்!

இன்னலுற்று வந்தோர்க்கும், உதவிநாடி வந்தோர்க்கும்,
மனைதனிலே இடமளித்து, பணிவிடைகள் பல செய்து
புரையோர் பலர் போற்ற, மலை நாட்டின் மணி விளக்காய்
மாண்புமிகு முதலாளியாராய், துணைவியுடன் இனிது வாழ்ந்தீர்.

பல தேசம் பறந்து சென்று, அருளாளர் ஆசி பெற்று
நலமுடனும், வளமுடனும் செம்மை பெற்று
இறைவனின் திருவருள் பெற்று, எமக்கும் நல்லாசிகள் நல்கி
இன்னல்கள் நெருங்கிடனும், சீருடனும் சிறப்புடனும்
மகிழ்வுடன் நாம் வாழ, எமக்காக நீர் வாழ்ந்தீர்!

பண்டாரவளை, கொக்குவில், கொழும்பு என்று
ஆண்டு பலவாக ஒன்றாகவே இருந்தோம்..

ஐயாவாக, மாமாவாக, தாத்தாவாக இருந்து ஈற்றில்
ஐயமில்லா குழந்தையாக ஆண்டு நூறு அடைந்தீர்.
வையகத்து வாழ்வு போதுமேயினியென்று, திரு
வையாகலாத செம்பொற்சோதியில் அருணாசலம் கலந்ததுவோ!

**இனியன், சறோ, சர்வேந்திரன் நாரணி,**
**அபராஜிதா பூரணி, சுபாஷினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "Thatha - A Brilliant Innings"– Run out at 99 – Just short of 'Crease'!

It is an honor and a privilege to write about my dear Thatha. In cricketing terms, he just failed to crease the bat – just short of a Century! None the less, he had a brilliant innings!

Going down memory lane... I became very close to my grand parents when I was boardered at St. Thomas Collage, Bandarawela. It was during my formative years then; I used to spend week-ends with Thatha and Ammammah. They showered their love and affection on me to the extent that I hardly felt the absence of my parents. I have cherished memories of going to the Kovil Thiruvizha with them. I remember sitting on Thatha's lap when going for drives and most of all when I accompanied him on his estate supervisions. I used to feel so proud of my Thatha, when people salute him!

Looking back on Thatha's life, his persona has left a lasting impression on me. Heading from a small remote village called Suruvil, he ventured to Bandarawela to seek greener pastures. There, after years of hard, honest and dedicated work he was able to purchase more than 300 acres of neglected estate and developed it into a lush green field of tea plantation. Single handedly he managed the Uva Dickarawa Estate for more than 30 years.

Thatha was an icon in Bandarawela. He was actively involved with the Community - be it the Murugan Kovil in Bandarawela or being the board member of the Badulla Private Hospital. Thatha was highly respected by the learned, saints and sages as well as the common man. His financial contribution made a difference to the Uduwara School in Hali Ela and I remember attending the Prize Giving Ceremonies with him many times..

Thatha and Ammammah were fortunate to travel the world, considering their generation. My parents were committed to taking them on a pilgrimage to India as far north as Rishikesh. They also traveled to Kenya when my parents were living there and proceeded to Zambia to visit my uncle and family. From there they proceeded to London. Again, during the late 80's they visited London and Canada. It is appropriate to call Thatha a Legend. He led a life of 3D s - Dignity, Discipline and Duty. He was a model father and a committed citizen. His way of life, his modesty and humility should be exemplary to all. As my colleague mentioned, we should celebrate his life and be proud of the legacy that he has left behind.

Loving 'Peran' the eldest grand son,
**Shankar.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தாத்தா...

எமது தாய் தந்தையர் சறோஜாதேவி நச்சினார்க்கினியன் பண்டார வளையில் கடமையாற்றிய பொழுது மூத்த பிள்ளைகள் நாரணி, பூரணி ஆகிய நாம் இருவரும் சிறுமிகள். தாத்தாவுக்கு ஒரு அழகிய தேயிலைத்தோட்டம் இருந்தது. அதில் விதவிதமான பூச்செடிகள், பழமரங்கள் நிறைந்த வசதி மிகுந்த பெரிய வீடு, நல்ல பால் தரும் பெரிய பசுக்கள், கார், லொறி போன்ற பல வசதிகளுடன் தாத்தாவும் அம்மம்மாவும் வாழ்ந்தார்கள். வேலை செய்ய பல வேலையாட்கள் இருந்தார்கள். ஆனால் எங்கள் தாத்தாவோ மிகவும் இனிமையான குணத்துடன் எளிமையான வாழ்வையே விரும்பி வாழ்ந்தார். அதனால் எங்கு சென்றாலும் அவர் அனைவராலும் மதிக்கப்பட்டார். அவருடன் செல்வதில் எங்களுக்கு ஒரு பெருமை.

எமக்கு எளிமையாக வாழ்தல், உண்மை பேசுதல், சொல் பிறழாமை, நேரத்திற்கு மதிப்பு, நம்ப நடத்தல் போன்ற குணங்கள் சமூகத்தில் ஒருவரை எவ்வளவு உயர்த்தும் என்பதை தன் வாழ்வு மூலமே உணர்த்தினார்.

1981ம் ஆண்டிற்குப் பின் கொக்குவில் கிராமத்தில் பொற்பதி வீதியில் நாம் ஒன்றாக இருந்த காலத்திலும் பின்னர் 1995ல் இடம் பெயர்ந்து சாவகச்சேரி, கொழும்பு வந்துவிட்ட பிறகும், அவர் தான் நம்பிய பண்புகளில் மாறுபடவில்லை. அவரது கடின உழைப்பு, கட்டுப்பாடான வாழ்வு முறையினால் 99 வயதைக் கடந்த பின்னரும், அதி குருதி அழுத்தம், நீரிழிவு, இருதய, மூட்டு நோய்கள் என்று முதியோரைத் தாக்கும் நோய்கள் அவரை அணுகவில்லை.

100 வயதை அண்மிக்க இன்னும் 3 மாதங்களே இருக்க, வைத்திய சாலையில் படுத்தே அறியாத தாத்தாவை பாரிசவாதம் வீட்டில் முழுநேர படுக்கை நோயாளி ஆக்கிவிட்டது. அந்த அந்திம நேரத்திலும் எமது பெற்றோர், மாமாமார், மாமிமார் தாத்தா அம்மம்மாவுடன் இருந்து பரிவுடன் சேவையாற்றியது எமக்கு ஓர் நல் உதாரணமாகவே இருக்கின்றது. ஏறத்தாழ 100 வருடங்கள் இப்பூவுலகில் வாழ்ந்து எமக்கு எப்படி வாழவேண்டும் என்று ஒரு பாடமாக வாழ்ந்து காட்டிய தாத்தா இறையடியை இணைய பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பேத்திமார் **நாரணி, பூரணி, சுபாஷினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Fond Memories... Thatha

I have many fond memories of my beloved Thatha. I have been fortunate enough to have visited Thatha and Appamma almost every year of my life. I admired Thatha's charisma and he was a great diplomat. During his later years although he may not have always been sharp, he was always pleasant with his approach to others. Family and friends always spoke highly of my Thatha and it makes me proud to be his grand-daughter.

Thatha loved asking me to sing Thevarams and I never missed the 'thirupuhal' ending with Thatha's name "Aathi Arunsalam". I can still visualise his broad smile and the twinkle in his eyes when I sang that line. I am ever so grateful for having had the opportunity to celebrate Thatha's 99th birthday with him. It is a pity that he is no longer with us for our planned 100th birthday family reunion.

Thatha, I miss you and I know how much more my Appa is feeling your absence. You will always be in our thoughts.

Your baby grand-daughter

**Lavaniya**

## "Pootta..."

I am writing on behalf of all the great grand children. It was a great privilege to have known pootta. Not a lot of children would have had the opportunity to meet and spend time with their great grand dad. Though, we only saw him when we were on holidays we love to hear our parents talking about all the good times they had with their grand parents. We will all miss you.


Lovingly

**All your great grand children**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# **வம்சாவளி** (Family Tree)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் **திரு. சுப்பையா அருணாசலம்** அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவருடன் உறவாடி அன்பு செலுத்திய வர்களுக்கும்,

நோயுற்ற சில மாதங்கள் உதவிய மருத்துவ சேவை ஊழியர் களுக்கும், அக்கறை செலுத்திய உற்றார், சுற்றத்தார் அன்பர்கள், நலன் விரும்பிகளின் ஊக்க செய்திகளுக்கும்,

மண்ணுயிர் நீத்த சமயம் இல்லம் வந்து ஆறுதல் கூறியோர், ஈமக்கிரியை சடங்குகளில் உதவிய, பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பூமாலைகள், மலர்வளையங்கள் சமர்ப் பித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், எமது கடமையை நிறைவேற்ற மெய்வருத்தம் பாராது பேருதவி புரிந்தவர்களுக்கும்,

இன்று நடைபெறும் ஆன்ம சாந்தி நிகழ்வுகளில் பங்கு கொண்டோ ருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
**மனைவி**
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**

69, 2/3, டேவிட்சன் வீதி
பம்பலப்பிட்டி
கொழும்பு 04
16-10-08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அதை வீணாக்குவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்.

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Layout & Cover Designed by Creative Ads, Tel: 2733765

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org